**வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகளையும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கையிருப்பு தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இலுள்ள 28 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் காணப்படுகின்ற கையிருப்பின் தேறக்கூடிய நிகரப் பெறுமதி மீது புதிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு அதற்கமைய கையிருப்பின் பெறுமதி சீராக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு அறிவி த்து நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம், கையிருப்பின் தேறக் கூடிய நிகரப் பெறுமதி மீது புதிய மதிப்பீடொ ன்றை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான ஏற்பாடு செய்யப்படுதல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் அசைவற்ற ரூபா 8,803,275 தொகையான இருப்புக்கள் தொடர்பில் நட்டக்கழிவுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் இருப்புக்களின் தேறக் கூடிய நிகரப் பெறுமதி மீது புதிதாக மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பில் நட்ட ஏற்பாடு செய்யப்படுதல் வேண் டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 (LKAS 16- ஆதனம், பொறி மற்றும் உபகரணம்) இலுள்ள 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் என்பன குறைந்தபட்சம் ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய புத்தகப் பெறுமதி பூச்சியமாகக் காணப்பட்ட ரூபா 78,324,381 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் என்பன மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. | நியமத்தின் படி சொத்து க்களின் எஞ்சிய பெறு மதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் என்பன குறைந்தபட்சம் ஒவ் வோர் ஆண்டின் இறுதி யிலும் மீளாய்வு செய்யப் படுதல் வேண்டும். |
| (இ) | ரூபா 135,000,000 கிரயமான வரையறுக்கப்பட்ட சீனோர் ஒரியன்ட் பர்ல் சீ பூட் உணவகம் அமைந்துள்ள 2 ரூட், 12 பேர்ச் காணி மற்றும் ரூபா 115,000,000 கிரயமான மட்டக்குளி இயந்திரவேலை நிலையத்திலுள்ள 25,000 சதுர அடி விஸ்தீரணமுடைய குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள களஞ்சியம் என்பன 40 ஆவது நியமத்தின் 75 மற்றும் 79 ஆம் பந்திகளின் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் படி தொட ர்ச்சியாக வருமானத்தை ஈட்டித்தரும் சொத்துக்கள் முதலீட்டு சொத்துக்க ளாக நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண் டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இலுள்ள 120 அ பந்தியின் படி, ஊழியர் நல ஒதுக்கீட்டை கணிப்பிடுகையில் பிரயோகிக் கப்பட வேண்டிய அடிப்படைக் கோட்பாடாகிய ஊழிய நலச் செலவினத் தின் நிகழ்கால சேவைக் கிரயம், ஆண்டிற்கான வட்டிக் கிரயம் மற்றும் எடுகோல்களின் மாற்றம் காரணமாக ஏற்பட்ட ஆயுட்கால நயம்/நட்டம் மீதான பொறுப்பு ஆகியன வெளிப்படுத்தப்ப டாததுடன், 93 அ பந்தி யின் படி எடுகோல்களின் மாற்றம் காரணமாக | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் படி ஊழிய நல ஒதுக்கீட்டை கணிப்பி டுகையில் ஆயுட்கால நயம்/ நட்டம் மீதான பொறுப்பை வெளிப்படுத் தலானது ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பட்ட ஆயுட்கால நயம்/ நட்டம் மீதான பொறுப்பு ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | ரூபா 1,961,850 தொகையான ஸ்ரீ பங்களாஸ் படகு இணைப்பு வணிகத்தின் முதலீடு, நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் நட்டக்கழிவு ஏற்பாடாக நிதி நிலைமைக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இலுள்ள 126 இன் படி, நட்டக்கழிவுச் சொத்துக்களின் முன் கொண்டு செல்லும் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாமையால் முதலீடுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஸ்ரீ பங்களாஸ் படகுகளின் முதலீட்டுப் பெறுமதி மிகைப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் படி நட்டக் கழிவுச் சொத்துக்க ளின் முன் கொண்டு செல்லும் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்த ப்பட வேண்டும். |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நோர்த் சீ தனியார் கம்பனியின் பெயரில் 2011 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற ரூபா 9,204,498 மீதிக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 இலுள்ள 5.5 ஆம் பந்தியின் படி நட்டச்சேதம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. | நியமத்தின் படி நட்டச் சேதத்திற்கு உட்பட்ட சொத்துக்களின் முன் கொண்டு செல்லும் பெறுமதி நிதி நிலை மைக் கூற்றில் வெளிப்ப டுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 34,354,796 ஆன வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 39 கடன்பட்டோர்களுடன் தொடர் புடைய ரூபா 22,920,383 கூட்டுத்தொகையான மறைப்பெறுமதி மீதிகள் காணப்பட்டமையால் குறித்த மீதிகளின் காணப்படும் தன்மை மற்றும் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | 2020 இல் காணப்பட்ட மறைப்பெறுமதி மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பட்டதுடன் எஞ்சிய மீதிகள் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடி க்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் சரியாக கணக் கீடு செய்யப்படு தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015, 2016, 2017, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்குரிய கணக்காய்வுக் கட்டணமான மொத்தம் ரூபா 2,097,100 தொகையை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக காண்பிப்பதற்குப் பதிலாக ரூபா 586,000 தொகையினை மாத்திரம் செலுத்த வேண்டியதாக காண்பித்து எஞ்சிய ரூபா 1,511,100 தொகை வியாபாரக் கடன்கொடுத்தோராகக் காட்டப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணம் சரியா கக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான மொத்த பெறுமானத்தேய்வு ரூபா 34,468,137 ஆன போதிலும், வருமானக் கூற்றின் படி வருமானத்திற்கு எதிராக பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்த பெறுமானத்தேய்வுத் தொகை ரூபா 17,028,850 ஆனமையால் ஆண்டிற்கான நட்டம் ரூபா 17,439,287 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடவடி க்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வை சரியாக சீராக்குதல் வேண்டும். |
| (ஈ) | 2007 ஆம் ஆண்டு முதல் 2014 வரையான ஆண்டுகளிற்குரிய ரூபா 2,466,894 தொகையான பொருளாதார சேவைக் கட்டணத்தை 2019 ஆம் ஆண்டின் செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிரீடு செய்ய வேண்டிய காலம் கடந்திருந்தமையால் செலவினமாக பதிவழிக்கப்பட வேண்டிய போதிலும், செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணக் கணக்கின் மீதியும் நிறுத்தி வைக்கப்பட்ட நட்டமும் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் வருமான வரி கணிப் பீட்டின் போது செலுத் தவேண்டிய வருமான வரிக் கணக்கிலிருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண் டிய வருமான வரிக் கணக்கி லிருந்து பதிவழி க்கப்பட்டதனை திருத்தி செலவி னமாக பதிவழி த்தல் வேண் டும். |
| (உ) | ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் ரூபா 18,518,684 தொகையான பெறுமதிசேர் வரி பெற வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் திருத் தப்படும் | சரியாக கணக் கீடு செய்யப்படு தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | | நிதிக் கூற்றின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | முதலீட்டு ஆதன வருமானம் | 16,030,000 | 16,200,000 | 170,000 | பதில் அளிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றிலுள்ள பதிவுகள் திருத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றிலுள்ள | | | | | |
| | • ஆரம்ப காசும் காசுக்கு சமமானவைகளும் | 30,308,312 | 30,889,606 | 581,294 | பதில் அளிக்கப்படவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் திருத்தப்பட வேண்டும். |
| | • இறுதிக் காசும் காசுக்கு சமமானவைகளும் | 118,876,125 | 8,210,239 | 110,665,886 | | |
| | • குறுங்கால முதலீடுகள் | 26,000,000 | - | 260,000,000 | | |
| | • ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேய்மானம் | 29,051,182 | 17,028,850 | 12,022,332 | | |
| (இ) | வைப்புக் கணக்குகள் | 38,632,259 | 40,582,517 | 1,950,258 | ஆண்டின் இறுதிக்கான நாட்குறிப்புப் பதிவுகளிலுள்ள தொகைகள் பட்டோலைகளில் உள்ளடக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளிற்கான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீதிகள் உறுதிப் படுத்தப்பட்ட 02 கடன்கொடுத்தோர் மீதிகள் | 1,583,598 | 2,351,654 | 768,056 | பதில் அளிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களிற்கும் மீதி உறுதிப் படுத்தல் அறிக்கைளிலுள்ள மீதிகளிற்கும் இடையே |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | உள்ள பெறும திகள் ஒப்பிடப் பட்டு வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரியாக கணக்கீடு செய்யப் படுதல் வேண்டும். |
| (உ) | ஊழியர் நல ஒதுக்கீடு | 2,508,538 | 3,622,717 | 1,114,179 | பதில் அளிக்கப்படவில்லை. | பதிவேட்டுடன் காணப்படுகின்ற வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்து சரியாக கணக்கீடு செய்யப் படுதல் வேண்டும். |

### 1.5.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ரூபா 3,653,360 கூட்டுத்தொகையான 77 கடன்கொடுத்தோர் மீதிகள் பல்வேறு வருமானக் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபைக்கு விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தில் இந்த மீதி உள்ளடப்படாதுள்ளமையால் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தை சரியாக சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |
| (ஆ) செலுத்த வேண்டிய வைப்புக்கள் கணக்கிலுள்ள ரூபா 1,950,258 தனிப்பட்டோர் மீதிக்காக பட்டியல் ஒன்றைத் தயாரிக்காதும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றியும் அத் தொகை பல்வேறு வருமானக் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட் டிருந்தது. | பதில்களுடன் ரூபா 1,868,196 இற்கான தனிபட்டோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சரியாக தனிப்பட்டோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு முறையான அங்கீகாரத்துடன் மாத்திரம் பதிவழிப்பு செய்யப் படுதல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தோகை | சமர்ப்பிக்கப் படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பெறுமதிசேர் வரி | 11,719,949 | எழுத்து மூலச் சான்று | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | பெறுமதிசேர் வரி மீதியின் காணப்படு தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூலச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண் டும். |
| (ஆ) | தேசத்தை கட்டியெழுப்புதல் வரி | 10,406,699 | எழுத்து மூலச் சான்று | ஓரளவு சான்றுகள் மன்றத்திடம் உள்ளது. | தேசத்தை கட்டியெழுப் புதல் வரி மீதியின் காணப்படு தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூலச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | ஏனைய செலுத்த வேண்டியவை | | | | |
| | i. யாழ்ப்பாண இழப்பீட்டு கணக்கு | 118,570 | எழுத்து மூலச் சான்று | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | செலுத்த வேண்டிய வைப்புக்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூலச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| | ii. நிறுத்தி வைத்தல்கள் | 2,938,166 | | | |
| | iii. கோரப்படாத சம்பளம் மற்றும் வேதனம் | 364,711 | | | |
| | iv. கோரப்படாத பணிக்கொடை | 412,620 | | | |
| (ஈ) | விற்பனை முற்பணங்கள் | 60,973,187 | பட்டோலை | பதில் அளிக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய விற்பனை முற்பணத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூலச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | 2016 முதல் 2017 வரையான 04 ஏனைய பெற வேண்டிய மீதிகள் | 2,285,437 | எழுத்து மூலச் சான்று | இந்த மீதிகளை தீர்க்க முடியாதிருப் பதால் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து தேவையான ஏற்பா டுகள் மேற்கொள்ள ப்படும். | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஏனைய பெறப்பட வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு த் தேவையான எழுத்து மூலச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 64 கடன்கொடுத் தோர் மீதிகள் | 25,168,186 | மீதி உறுதிப்படு தல்கள் | மீதி உறுதிப்படுத் தல்களை பெற்றுக் கொள்வதற்காக கடன்கொடுத்தோரு க்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள் ளன. | கடன்கொடுநர் மீதி களின் உறுதிப்படுத் தல்களை பெற்றுக் கொள்தல் வேண்டும். |
| (எ) | 197 கடன்பட்டோர் மீதிகள் | 34,354,796 | மீதி உறுதிப்படு தல்கள் | பதில் அளிக்கப்பட வில்லை. | கடன்படுநர் மீதிகளின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொள்தல் வேண்டும். |
| (ஏ) | ஏனைய செலுத்த வேண்டியவை- சீ.எ.ஃ.ப்.எச்.சீ. பாதுகாப்பு | 1,144,306 | மீதி உறுதிப்படு தல்கள் | பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அதன் ஆலோச னைப் படி எதிர்கால த்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தல் களை பெற்றுக் கொள்தல் வேண்டும். |
| (ஐ) | பெறவேண்டிய பிடித்துவைத்தல் வரி | 1,119,029 | பிடித்துவை த்தல் வரிச் சான்றிதழ் | முன்றத்திடம் தகவல்கள் இல்லை | வரிச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | மத்துமகல காணி யின் முதலீட்டு வருமானம் | 2,700,000 | ஒப்படைத்த லுக்கான அங்கீகாரம் | பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அதன் ஆலோச னைப் படி எதிர்கால த்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கடற்றொ ழில் கூட்டுத்தாபனத் தினால் இந்தக் காணி வரையறுக்கப்பட்ட சீநோர் மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டமைக் கான மற்றும் இதனை மூன்றாம் தரப்புக்கு வாடகைக்கு வழங்கப் பட்டமைக்கான அங்கீ காரங்கள் சமர்ப்பிக்க ப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட திக்ஓவிட மீன்பிடி துறைமுக செயற்திட்டத்திற்குரிய பணிகளிற்காக 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பிடித்துவைக்கப்பட்டிருந்த முறையே ரூபா 1,757,057 மற்றும் ரூபா 1,770,766 ஆகிய மொத்தம் ரூபா 3,527,824 தொகையினை அறவிடுவதற்கு நிறுவனத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனங்களிடம் விசாரிக்கப்பட்ட போதிலும், உரிய பதில் கிடைக்காமையால் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அதன் ஆலோசனையின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகாலமாக காணப்படுகின்ற செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 முதல் 2017 வரை நிலவி வருகின்ற ரூபா 3,103,068 கூட்டுத் தொகையான செலுத்த வேண்டிய பிடி காசை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டு ள்ளது. | நீண்டகால நிலுவை மீதிகளை தீர்வு செய்வ தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 14,140,125 தொகையான முற்பணத்தில் 2003 முதல் 2018 ஆம் ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய ரூபா 8,878,264 தொகையான முற்பண மீதிகள் காணப்பட்ட போதிலும், குறித்த மீதிகளை அறவிடுவதற்காக இதுவரை பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பண மீதிகளை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்வதற்காக தனியார் நிறுவன மொன்றுக்கு உப ஒப்பந்த அடிப்படையின் கீழ் 2011 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டிருந்த மூலப்பொருள் பெறுமதியில் ரூபா 4,909,775 தொகை ஏனைய பெறவேண்டியவையாக நிதிக்கூற்று க்களில் 09 ஆண்டுகளாக தொடர்ச் சியாக காணப்பட்ட போதிலும், அந்த மீதியை அறவிடுவதற்கு மன்றத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனங்க ளிடம் விசாரிக்கப்ப ட்ட போதிலும், அவ்வாறானதேர் தொகை சீநோர் மன்றத்திற்கு செலுத்த வேண்டிய தில்லை என அறிவிக்கப்பட்டுள்ளமையால் பணிப்பா ளர் சபைக்கு அறிவி த்து உரிய ஏற்பாடு களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு நீண்டகாலமாக தீர்க் கப்படாதுள்ள முற்பண மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கூட்டிணைப்பு புறவிதி இன் 3.3 மற்றும் 3.5 ஆம் பந்தி | வ/ப சினோர் மன்றமானது ஐஸ் உற்பத்தி, கடல் உற்பத்திகளை பொதியிடுதல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், மீன்பிடி வலை களை உற்பத்தி செய்தல், படகுகளை நிர்மாணித்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய போதிலும், அதிலிருந்து விலகி படகு உற்பத்தியில் மாத்திரம் ஈடுபட்டிருந்த மையால் மன்றம் தாபிக்கப்பட்ட குறிக் கோளிலிருந்து விலகிச் செயற்பட்டி ருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதில் அளிக்கப்ப ட்டிருக்கவில்லை. | மன்றம் தாபிக்கப் பட்ட குறிக்கோளி ற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | கூட்டிணைப்பு அகவிதி | | | |
| (i) | 53 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டுமென குறிப்பிடப் பட்டுள்ள போதிலும், 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக் கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிரு க்கவில்லை. | கூட்டிணைப்பு அகவிதியின் படி வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |
| (ii) | 58 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், தலைவரை நியமித்தல் அவ்வாறு இடம்பெற்றி ருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிரு க்கவில்லை. | கூட்டிணைப்பு அகவிதியின் படி பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலை வர் நியமிக்கப்படு தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம லாப நிதி (திருத்த) சட்டம் | எந்தவொரு மாதத்தினதும் ஊழி யர் சேமலாப நிதி பங்களிப்புத் தொகையை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டிய போதிலும், 2017 யூலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 36,740 தொகை 2019 யூன் மாத்திலிருந்து அனுப்பி வைக்கப்படாது நிறுத்திவைக்கப்பட்டிரு ந்தது. | குறித்த உத்தியோகத்தர் சேவைக்கு சமூகமளிக்காமைய ால் செயற்பாடற்ற தொகையாகக் கருதி EPF/ETF தயாரிக்கப்படவில் லை. | விசாரணை மேற்கொள்ளப்பட்டு சட்டத்தின் பிரகாரம் உதவு தொகைகளை அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (ஈ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்திய) சட்டம். | எந்தவொரு மாதத்தினதும் ஊழி யர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகையை அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டிய போதிலும், 2017 யூலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 5,510 தொகை 2019 யூன் மாத்திலிருந்து அனுப்பி வைக்கப்படாது நிறுத்திவைக்கப்பட்டிரு ந்தது. | குறித்த உத்தியோகத்தர் சேவைக்கு சமூகமளிக்காமைய ால் செயற்பாடற்ற தொகையாகக் கருதி EPF/ETF தயாரிக்கப்படவில் லை. | விசாரணை மேற்கொள்ளப்பட்டு சட்டத்தின் பிரகாரம் உதவு தொகைகளை அனுப்பிவைத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 24,403,823 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு முன்னைய நேரொத்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 25,600,930 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 1,197,107 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிர்வாகச் செலவினம் 34 சதவீதத்தினால் அல்லது ரூபா 20,854,252 ஆல் குறைவடைந்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணியாக காணப்பட்டது.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் உடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்து விகிதம் முறையே 1:1.48 மற்றும் 1:1.30 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான காசு மற்றும் வங்கி மீதிகள் 230 சதவீதத்தால் குறைவடைந்தும் ஏனைய செலுத்த வேண்டியவை 33 சதவீதத்தால் அதிகரித்தும் காணப்பட்டமையே இந்த விகிதம் குறைந்தமைக்கு பிரதான காரணமாகும்.

(ஆ) முன்னைய ஆண்டின் 1:0.70 உடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான விரைவுச் சொத்து விகிதம் 1:0.58 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டில் நிலவிய ரூபா 17,133,599 வங்கி மீதியானது ரூபா 39,516,333 ஆல் வீழ்ச்சியடைந்தமையே இந்த விகிதம் குறைந்தமைக்கு பிரதான காரணமாகும்.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான இணைப்பு விகிதம் 1:1.88 இலிருந்து 1:1.93 வரை அதிகரித்திருந்தது. உரிமை மூலதனம் 6 சதவீதத்தினாலும் கடன் மூலதனம் 9 சதவீதத்தினாலும் குறைவடைந்தமையே இதற்குப் பிரதான காரணமாகும்.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சீ-நோர் மன்றத்திற்குச் சொந்தமான இல. 335 டீ.ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியில் அமைந்துள்ள வெற்றுக் காணி 1998 யூலை 04 ஆந் திகதி முதல் 20 ஆண்டுகளிற்கு உணவகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக வரையறுக்கப்பட்ட ஓரியன்ட் பேர்ல் ஹொட்டேல் லிமிடட் எனும் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குத்தகைக் காலம் முடிவடைந்த பின்னர் மன்றத்தால் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் களிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்த மையால் எழுந்திருந்த முரண்பாடுகள் காரணமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான 2 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அந்தக் ஆதனத்திலிருந்து எந்தவொரு பொருளா தார நலனும் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே மன்றத்தால் 2018 ஆம் ஆண்டிற்குரிய அந்த நிறுவன இலாபத்திலிருந்து ரூபா 323,515 தொகையான பங்கிலாபம் அறவிடப்பட் டிருக்காததுடன், காணியின் உரித்தினை பெற்றுக் கொள்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. | பதில் அளிக்கப்படவில்லை. | பங்கிலாபத்தை அறவிடுவதற்கும் காணியின் உரித் தினை பெற்றுக் கொள்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் 4 பதவிகளிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பத்திரிகை விளம்பரங்களிற்காக மொத்தம் ரூபா 109,080 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் குறித்த ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்காமையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 109,080 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | பயனற்ற செலவினம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக முகாமைமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 வரையான வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 31,572,644 ஆகக் காணப்பட்டதுடன் வங்கி மேலதிகப்பற்றை பெற்றுக் கொண்டமை க்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 874,659 வட்டி செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2020 திசெம்பர் 31 வரை 4 வங்கிக் கணக்குகளிலும் 2 கட்டுநிதிக் கணக்குகளிலும் மொத்தம் ரூபா 9,189,907 வரவு மீதி காணப்பட்டமையால் அத்திகதியில் உள்ளவாறான வங்கி மற்றும் காசு மீதி ரூபா 22,382,735 வங்கி மேலதிகப்பற்று என்பதாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | பதில் அளிக்கப்படவில்லை. | வங்கி மேலதிகப் பற்று வட்டியினை செலுத்தாதிருக்கும் வகையில் வங்கிக் கணக்குகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 136,818,381 தொகையான பிற்போட்ட பொறுப்புக்களை நிதிக் கூற்றுக்களில் போதியளவில் முன்வைக் காது ஊழியர் நலப் பொறுப்புக்களில் உள்ளடக்கி பிற்போட்ட பொறுப்புக் களாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் நலப் பொறுப்புக்களும் பிற்போட்ட பொறுப்புக்களும் நிதி நிலைமைக் கூற்றில் தனித்தனியாக காட்டப்படுதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020-2024 ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டம் 2020 ஆம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2020 யூன் 19 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாட்டின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ரூபா 16,680.91 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு 15 செயற்பாடுகளை மேற்கொள் வதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 இற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் முன்னேற்ற அறிக்கையின் படி செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இல்லாத சில நடவடிக்கைகளிற்காக ரூபா 57.33 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவ தற்கு முகாமைத்து வம் கவனம் செலுத் துதல் வேண்டும். |